

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி நொய்யல் பகுதியில், புதிய தார் சாலை நிழற்குடை அமைக்கும் பணியினை மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க. சிவகாமசுந்தரி, ஒன்றிய கழக செயலாளர் சி.வளர்மதி உள்ளிட்டோர் அருகில் உள்ளனர்.



திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரியில் 2023–2024 ஆம் ஆண்டிற்கான பட்டமளிப்பு விழாவில் கல்லூரி மைதானத்தில் நடந்து விழாவில் முதன்மை விருந்தினராக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் சிறப்பு விருந்தினராக திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டு நெறியாளர் (பொ) முனைவர் ஜெயபிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டு மாணவ மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்கள், விழாவில் பிஷப் ஹீபர் கல்லூரியில் கலைத்துறையின் முதன்மையர் முனைவர் ஷோபனா மற்றும் அறிவியல்துறையின் முதன்மையர் வயலட் தயாபரன் பட்டம் பெரும் மாணவர்களின் பெயர்களை பட்டியலிட்டனர். இவ்விழாவில் கல்லூரியின் முதல்வர் பிரின்சி மெர்லின், அரசு உதவி பெறும் பிரிவின் துணை முதல்வர் சத்தியசீலன், சுயநிதி பிரிவின் துணை முதல்வர் ரவி தாஸ், கல்லூரியின் நிதியாளர் தனபால் மற்றும் கல்லூரியின் தேர்வு கட்டுப்பாட்டு நெறியாளர் ரெல்டன், மாணவ மாணவியர்கள், கல்லூரி பேராசிரியர்கள், கல்லூரி துறை தலைவர்கள், ஊழியர்கள் மற்றும் பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### அ.தி.மு.க.வினரின் பொய் வழக்குகளிலிருந்து

# மன்னார்குடி நகரச் செயலாளர் வீரா.கணேசன் உள்ளிட்ட 21பேர் விடுவிப்பு!

திருவாரூர், ஜன. 6-

கடந்த 2007 ம் ஆண்டு அரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் அதிமுக வினர் திமுக நிர்வாகிகள் மீது புனைந்த பொய் வழக்குகளிலிருந்து மன்னை நகர செயலாளர் வீரா. கணேசன் உள்ளிட்ட 21போர்களில் தற்போது உயிரோடு இல்லாத மூன்று பேர் உள்ளிட்ட 18 பேரும் தற்போது வழக்கில் இருந்து விடுக்கப் பட்டுள்ளனர்.

கடந்த 2007 ஆம் மன்னார்குடி நகரப்பகுதியில் , அரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் அ.தி.மு.க.வினர், திமுக மாவட்ட கழக பொருளாளராக இருந்த வீரா. கணேசன் உள்ளிட்ட 21 நபர் மீது பொய் புகார் அளித்தனர், அந்த வழக்கு 17 ஆண்டுகளாக நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், 04.01.2015 அன்று நடைபெற்ற இறுதி விசாரணையில் அனைவரும் நீதிமன்றத்தால் நிரபராதிகள் எனக்கருதப்பட்டு திமுக நிர்வாகிகள் அனைவரும் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுதலை பெற்றுள்ளனர்.

இந்த பொய் வழக்குகளிலிருந்து கழகத்தினரை விடுவிக்க, சட்டப்போராட்டம் நடத்த உறுதுணையாக இருந்த மின்னும் மன்னையின் சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் மாண்பு மிகு முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கும், மாவட்ட கழக செயலாளர் பூண்டி .கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களுக்கும், மூத்த வழக்கறிஞர் வீரா.கதிரவன் , மாவட்ட கழக வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் கோ.வீரக்குமார் உள்ளிட்ட கழக சட்டத்துறைக்கும் மன்னை நகர தி.மு.க. சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

வழக்கிலிருந்து விடுதலை பெற்ற நகர கழக செயலாளர் வீரா.கணேசன், மு.நகர செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ராஜ.பூபாலன், மாவட்ட பிரதிநிதி ஜெ.உத்தமன், மாவட்ட பிரதிநிதி பாசறை ராஜேந்திரன், வார்டு செயலாளர் பக்கிரிசாமி, வார்டு செயலாளர் துரை.பாஸ்கரன், நகர்மன்ற முன்னாள் உறுப்பினர் வி. மதியரசன், நகர்மன்ற உறுப்பினர் எஸ்.பாண்டவர், வார்டு செயலாளர் சோம. கரிகாலன், வார்டு செயலாளர் எஸ்.பி.பழனிசெல்வன், நகர்மன்ற உறுப்பினர் ஜெய. பாலா, நகர்மன்ற உறுப்பினர் சாம்பு.வெங்கடேஷ், வார்டு செயலாளர் காசி. கார்த்தி, வார்டு செயலாளர், எஸ். மணிவண்ணன், வார்டு பிரதிநிதி அய்யா அசோக் , வார்டு பிரதிநிதி சி.விவேக், வார்டு பிரதிநிதி ஜி.பிரபு, வார்டு மு.பிரதிநிதி பால காமராஜ் , வார்டு முன்னாள் பிரதிநிதி பிரேம்

உள்ளிட்ட அனைவரும் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியபின், அவர்களை மன்னை நகர் மன்ற தலைவர் மன்னை த. சோழராஜன் சால்வை அணிவித்து வரவேற்றார். வழக்கு நடைபெற்று கொண்டிருந்த காலத்தில் இயற்கை எய்திய நகர்மன்ற முன்னாள் உறுப்பினர் க.தம்பிதுரை, (தேவர் காலனி) வார்டு கழக முன்னாள் செயலாளர் சா. கோபால், கழக உறுப்பினர் வளையல் ராஜா (எ) திருமலைவாசன் ஆகியோர் ஆவர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

# தொகுதிகளில் வளர்ச்சி திட்டப்பணிகள்!

### மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

கிருஷ்ணகிரி, ஜன.6-

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி மத்தூர் ஒன்றியம் வாலிப்பட்டி ஊராட்சியில் ரூ.98.80 லட்சம் மதிப்பீட்டில் வாலிப்பட்டி முதல் சாணிப்பட்டி வரை தார் சாலை அமைக்கும் பணிகளையும், சிவம்பட்டி ஊராட்சியில் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சங்கர் அவர்களின் மேம்பாட்டு நிதியிலிருந்து

ரூ.27.25 லட்சம் மதிப்பீட்டில் 60 ஆயிரம் லிட்டர் மேல்நிலை நீர் தேக்க தொட்டியை திறந்து வைத்தும், பயணியர் நிழற்கூடம் அமைப்பதற்கான பணிகளையும் இதனைத் தொடர்ந்து 5.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்தூர் ஊராட்சி ஒனறிய அலுவலக கட்டிடம் கட்டும் பணிகளையும், நாகம்பட்டி ஊராட்சி என்.மோட்டூர் கிராமத்தில் 1.07 கோடி ரூபாய் மதிப்பில் சிமெண்ட் கல் பதித்தல், பைப்லைன், கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தோம் பர்கூர் சட்ட மன்ற தொகுதி குட்டூரில் புதிய ஊராட்சி மன்ற அலுவலகத்தை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் தே.மதியழகன் தொடங்கி வைத்தார்

இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாவட்ட பொருளாளர் கதிரவன் , தலைமை செயற்குழு உறுப்பினர் செந்தில் ,

ஒன்றிய செயலாளர் நரசிம்மன், குண.வசந்தரசு, எக்கூர் செல்வம், அறிஞர், ராஜேந்திரன்,

ஒன்றிய குழு பெருந்தலைவர் பெருந்தலைவர் விஜயலட்சுமி பெருமாள், மாவட்ட கவுன்சிலர் சங்கர், ஆதி திராவிடர் நல குழு அமைப்பாளர் ஜீவானந்தம் , மருத்துவர் அணி துணை தலைவர் தென்னரசு, துணை அமைப்பாளர்கள் சக்திவேல், பாலாஜி, ஊராட்சி மன்ற தலைவர் செல்வி கதிர்வேல், பெருமாள்

உள்ளிட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### இல.பத்மநாபன் - எஸ்.வி.செந்தில்குமார் முன்னிலை

# ரூ. 5.90 கோடி மதிப்பீட்டில் தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கட்டும் பணி!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் - துவக்கி வைத்தனர்!

திருப்பூர், ஜன.5-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ரூ 5.90 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணியினை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் எஸ். வி.செந்தில்குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு. பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்தனர்!

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19.12.2024 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து காணொளிகாட்சி வாயிலாக தாராபுரம் ஒன்றியம், நாஞ்சியம்பாளையம் ஊராட்சி, தாராபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையம் எதிரில் தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ஒதுக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ரூ 5.90 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டிவைத்தார்கள். அதனைத் தொடர்ந்து 02.01.2025 வியாழக்கிழமை அன்று தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் எஸ். வி.செந்தில்குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு. பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் புதிய கட்டடம் கட்டும் பணியினை துவக்கி வைத்தனர்.

தாராபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் 17,020 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ளது. இரண்டு தளங்களை கொண்ட இக்கட்டடம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் அறை, ஆணையாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் அறை, ஒன்றியக்குழு கூட்ட அரங்கு, அலுவலக அரங்கு, தணிக்க அலுவலர் அறை, கணிணி அறை, பதிவேடுகள் அறை, இருப்பறை, கழிப்பறை வளாகமும், வட்டார வளர்ச்சி அலுவலர் அறை, பொறியியல் பிரிவு, பயிற்சிக் கூட்டரங்கு, அலுவலக அரங்கு, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறை, கணினி அறை, கழிப்பறை வளாகம் ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் பிரபாவதி பெரியசாமி, கே.எஸ்.தனசேகர், எஸ். முருகானந் தம், கு.பாப்புக் கண்ணன், மாவட்ட மகளிர் அணி சரஸ்வதி ராஜேந்திரன், க. செல்வராஜ், கருணாகரன், சிவக்குமார், சன் பாலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில், விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் தலைமையில், திண்டிவனம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஜாபர் அலி முன்னிலையில் நடைபெற்ற திண்டிவனம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றியச் செயலாளர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இதில், தலைமைக் கழக ஆணைக்கிணங்க BLC அமைப்பு பற்றிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில், மாவட்ட பொருளாளர் ரமணன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், ஒலக்கூர் ஒன்றிய குழு தலைவர் சொக்கலிங்கம், மரக்காணம் ஒன்றியக் குழு தலைவர் தயாளன், மரக்காணம் ஒன்றிய செயலாளர்கள் பழனி, ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை புகாரி
### சனவரி 6 (1999)



**கழகத்தின் தொடக்க நாள் முதலாக அறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்டுதலையேற்று, தி.மு.க.வின் கொள்கையில் உறுதி கொண்டு, தமிழ்நாட்டின் ஊர்கள்தோறும் கழக மேடைகளில் கொள்கை பரப்பும் முழக்கம் செய்தவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களின் அன்பைப் பெற்றவர்.**

**கழகத்தின் அறப்போராட்டங்கள் பலவற்றிலும் ஈடுபட்டு சிறை சென்றது மட்டுமின்றி, மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.**

**“சிறுபான்மையினரான இசுலாமியர்கள் பெரும்பான்மையினருடன் இணக்கமாக வாழ்வதற்கான வழிகாண்பது தி.மு.கழகம்” என்பதில் உறுதி பூண்டு அயராது பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# அரசியலமைப்புக் குற்றத்திலிருந்து தப்ப முடியாது!

### பிரதமர் மோடிக்கு கார்கே எச்சரிக்கை!

புதுடெல்லி, ஜன. 6 -

ஒன்றரை ஆண்டுகளாக பற்றி எரியும் மணிப்பூருக்குச் செல்லாத பிரதமர் மோடி, அரசியலமைப்பு குற்றத்திலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடுமையாக சாடியுள்ளார்.

பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் மணிப்பூரில் மீண்டும் வன்முறை அரங்கேறியுள்ளது. காங்போக்பி மாவட்டத்தில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தால் அங்கு பதற்றம் நிலவி வருகிறது.

இதுதொடர்பாக பிரதமர் மோடிக்கு அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி காங்கிரஸ் தலைவர் கார்கே சமூக வலைதளப்பதிவில் விளக்கமாக பதிவிட்டுள்ளார்.

அதில், கடந்த 2020 ஆம் ஆண்டு ஜனவரியில் பா.ஜ.க.வுக்கு தேர்தல் பிரச்சாரத்துக்காக மணிப்பூருக்கு பிரதமர் மோடி கடைசியாக சென்றதை கார்கே குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அதன் பிறகு 2023 ஆம் ஆண்டு மே மாதம் 3-ஆம் தேதி மணிப்பூரில் அரங்கேறிய வன்முறை சம்பவங்கள் 600 நாட்களுக்கு மேலாகிவிட்டது. பல்வேறு கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளதை செயற்கைகோள் படங்கள் தெளிவாக காட்டுவதாக கார்கே கூறியுள்ளார்.

250க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிரிழப்பு, 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ள நிலையில், பா.ஜ.க.வின் சுயநலத்தால் மணிப்பூர் மாநிலம் இன்னும் பற்றி எரிந்து கொண்டிருப்பதாக கார்கே வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா கூட்டணிக் கட்சிகள் பிரதமர் மோடிக்கு கடந்த டிசம்பர் 6 ஆம் தேதி கேட்கப்பட்ட கேள்விகளை தனது சமூக வலைதளப்பதிவில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2024 ஆம் ஆண்டு டிசம்பருக்குள் மணிப்பூருக்குச் செல்லுமாறு கூறினோம், ஆனால் நீங்கள் செல்லவில்லை. மணிப்பூர் விவகாரம் தொடர்பாக, டெல்லியில் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை அழைத்து பேசுமாறு கூறியதையும் ஏற்கவில்லை. மணிப்பூருக்கு நேரடியாகச் சென்று அங்குள்ள மக்களை நேரில் சந்திக்குமாறு வலியுறுத்தியதையும் செயல்படுத்தவில்லை என்று பிரதமர் மோடியை கார்கே விமர்சித்துள்ளார்.

இவற்றில் எதையுமே செய்யாத பிரதமர் மோடி அரசியலமைப்பு குற்றத்திலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என்று கூறியுள்ள காங்கிரஸ் தலைவர் கார்கே, மணிப்பூரை எரிக்கும் தீக்குச்சியாகவே பா.ஜ.க. உள்ளதாகவும் காட்டமாக விமர்சித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பூவாளூர் சின்னதுரை
### சனவரி 6 (2014)



**தந்தை பெரியாரிடம் அணுக்கமாக இருந்து பணியாற்றியவரும், பேரறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்றவரும், தொடக்கத்தில் நண்பராகவும், பின்னர் தலைவராகவும் கலைஞரை ஏற்றுச் செயல்பட்டவர்.**

**திராவிடர் கழகத்தில் இருந்தபோது இந்தித் திணிப்பை எதிர்த்து ஆறு முறை சிறை சென்றதையும் – தி.மு.க.வில் தம்மை இணைத்துக் கொண்ட பின்னர் கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் 12 முறை சிறை சென்றதையும் பெருமையாகக் கருதியவர்.**

**1998ஆம் ஆண்டு தி.மு.க. நடத்திய முப்பெரும் விழாவில் “பெரியார் விருது” வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**